# மாத்தளை மாநகர சபை

## மாத்தளை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 23 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 யூன் 23 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 ஒக்தோபர் 08 ஆந் திகதி சபையின் நகராதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

நகராதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள எனது இவ்வறிக்கையில் காணப்படும்கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாத்தளை மாநகர சபையின் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு களஞ்சிய இருப்புக்களின் பெறுமதி ரூபா 2,671,948 தொகை குறைவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் நேரடியாக வங்கியில் கைப்புச் செய்யப்பட்ட ரூபா 327,356 தொகையான வருமானம் கணக்குகளுக்குக் கொண்டுவரப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டின் பற்றுச் சீட்டுக்களின் பிரகாரம் ஆதனவரி வருமானம் ரூபா 20,318,195 ஆக இருந்த போதிலும் ஆண்டின் ஆதன வரி வருமானம் ரூபா

22,476,999 தொகையாகக் காண்பிக்கப்பட்டமையினால் வருமானம் ரூபா 2,158,804 தொகை அதிகரித்து கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டின் ஆதன வரிக்காக வழங்கப்பட்ட கழிவுகள் மற்றும் வரிச் சலுகைகள் என்பவற்றின் கூட்டுப்பெறுமதி ரூபா 2,745,002 ஆக இருந்த போதிலும் ரூபா 4,837,181 என அதிகரித்துக் கணக்கு வைக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய ஆதனவரி வருமானம் மற்றும் ஆண்டின் மிகை என்பன ரூபா 2,092,179 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டில் நன்கொடையாகக் கிடைத்த ஆர்சீ – 1113 ஆம் இலக்க உழவு இயந்திரத்தின் பெறுமதி கணிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 5 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 165,795,039 ஆக இருந்ததுடன் அதற்குரிய துணைப் பதிவேடுகள்/ அறிக்கைகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 159,515,685 ஆக இருந்தமையினால் ரூபா 6,279,345 தொகையான வேறுபாடு வெளிப்படுத்தப்பட்டது.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

**(அ) பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 08 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. அவ் ஐய வினாக்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களின் கணிப்பீடு செய்யக்கூடிய பெறுமதி ரூபா 25,654,224 ஆக இருந்தது.

**(ஆ) கணக்காய்விற்காக தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 287,637,511 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,814,652 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 235,911 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

(அ) 1992 ஆம் ஆண்டின் ரூபா 8,265 பெறுமதியான 02 காசோலைகளும், 2009 ஆம் ஆண்டின் ரூபா 71,650 பெறுமதியான 04 காசோலைகளும், மீளாய்வாண்டின் ரூபா 2,000 பெறுமதியான 01 காசோலையும் மதிப்பிழந்திருந்த போதிலும் அந்தக் காசோலைகள் தொடர்பாக இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 189 இன் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 371(இ) பந்தியின் பிரகாரம் வழங்குகின்ற முற்பணங்கள் உரிய செயற்பாடு நிறைவடைந்தும் உடனடியாகவே தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 1994 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை 264 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 2,586,042 தொகையான முற்பணமும் மீளாய்வாண்டின் போது 06 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 54,291 தொகையான முற்பணமும் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வருடாந்த பாதீட்டின் மூலம் 13478 ஆம் இலக்க செலவின விடயத்திற்கு ரூபா 400,000 ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தும் 2011 செப்தெம்பர் 28 ஆந் திகதி மாற்றல் பத்திர இலக்கம் 7 இன் மூலம் 12458 ஆம் செலவின விடயத்திற்கு ரூபா 300,000 தொகையும் 13458 ஆம் செலவின விடயத்திற்கு ரூபா 100,000 தொகைப்படியும் ஒட்டுமொத்த நிதி ஏற்பாடும் மாற்றப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் மேற்கூறப்பட்ட செலவின விடயத்தில் ஏற்பாடுகள் கணப்படாதிருந்த போதும் நாட்குறிப்பு இலக்கம் ஏப்ஏ/12/2011 ஆம் இலக்கத்தின் மூலம் ஆதனவரி சலுகை வழங்கலுக்காக ரூபா 4,837,181 தொகை 13478 ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழ் சபையின் அங்கீகாரமின்றி செலவிடப்பட்டிருந்தது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 16,000 | 22,938 | 11,023 |
| (ii) | வாடகை | 6,327 | 15,001 | 4,694 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 15,231 | 4,650 | 47 |
| (iv) | ஏனைய வருமானம் | 144,524 | 153,215 | 13,463 |

### 2.3.2 வருமான முன்னேற்றம்

சபைக்கு கையளிக்கப்பட்ட வருமான மூலங்களிலிருந்து சேகரிக்க முடியுமாக இருந்த வருமானம் 96,078,691 ஆக இருந்ததுடன் சபையினைக் கொண்டு நடாத்துவதற்காக ஆண்டின் போது ஏற்பட்ட மீண்டுவரும் செலவினம் ரூபா 181,988,576 ஆக இருந்தது. அதில் அடங்கியிருந்த சபையின் ஊழியர் சம்பளத்திற்காகச் செய்யப்பட்ட செலவினம் ரூபா 120,876,768 ஆக இருந்ததுடன் ஊழியர் சம்பளக் கொடுப்பனவுகளுக்கேனும் சபை சேகரித்த வருமான அளவு போதாதிருந்தது. மேலும், சபைக்கு கையளிக்கப்பட்ட வருமான வழிகளில் வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்குத் தேவையான உபாயம் எதுவும் பின்பற்றப்படாதிருந்தமையும் காணக்கூடியதாக இருந்தது.

**2.3.3 நீதிமன்ற தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டபணம் | 2,630,350 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 4,472,600 |

**2.3.4 நீர்க் கட்டணம்**

சபையின் நிர் வழங்கல் முறைமை 2004 ஆம் ஆண்டில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்குக் கையளிக்கும் போது காணப்பட்ட ரூபா 4,802,812 தொகையான நிலுவை நீர்க்கட்டண மீதி சபைக்குக் கையளிக்கின்ற போது அறவிடமுடியாதிருந்த போதும் அதனை பாவனையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய பௌதீக வளங்கள்**

ரூபா 1,090,455 பெறுமதியான பௌதீக வாகனங்கள் செயற்பாடற்று மற்றும் குறைவான பயன்பாடுடையதாகக் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்டது.

**2.5 போதிய அதிகார பலத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

(அ) சபையினால் 2011 ஆம் ஆண்டில் ரூபா 501,451 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஹிக்கொல்ல வாகன சேவை நிலையத்தின் சாத்திய வள ஆய்வு செய்து மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு திட்டமிடல் குழு மற்றும் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் உப விதி ஏற்பாடுகளை விதித்து வர்த்தமானியில் பிரசுரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேற்கூறப்பட்ட சேவை நிலையத்தை நிர்மாணித்த காணியின் ஒரு பகுதியில் அனுமதியற்ற தனியார் வீடு நிர்மாணிக்கப்பட்டிருந்தும் அதனை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கே.எச் - 4277 ஆம் இலக்க வாகனத்தைப் பழுதுபார்த்தல் மற்றும் சேவை செய்வதற்காக அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 9.3.1 (ஆ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அங்கீகாரமின்றி தனியார் நிறுவனத்திற்கு 02 சந்தர்ப்பங்களில் ரூபா 262,627 தொகை செலுத்தப்பட்டிருந்தன.

(இ) கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் சந்தைப் போட்டியாளர் அடிப்படை பின்பற்றப்பட்டு பொருள் அல்லது சேவை என்பன பெறவேண்டிய போதிலும் அதற்கு முரணாக எவ்வித கூறுவிலைகளும் கோரப்படாமல் ரூபா 242,680 பெறுமதியான 24 கதிரைகள் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அவ்வாறே மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 28 ஆவது பிரிவின் பிரகாரம் நிதி தொடர்பான நிலையியற் குழுவினால் முன் ஆலோசிக்கப்பட்டு மாநகர சபைக்கு அறிக்கையிடும் வரையிலும் சபையினால் எவ்வித நிதி தொடர்பான விடயங்களில் இறுதியான முடிவுகளைச் செய்ய முடியாதிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தும் சபையினதோ அல்லது நகராதிபதியினதோ அங்கீகாரம் பெறப்படாமல் இக் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 264 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் தொடர்பானவர்களிடமிருந்து பெறப்பட்ட பற்றுச்சீட்டோ அல்லது ஆதாரமான எந்த ஆவணங்களோ சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

(அ) 2009 செப்தெம்பர் 18 ஆந் திகதிய பீஎப் 437 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிரூபத்தின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய சொத்துக் காப்புறுதி பூட்கை நேரடியாக தேசிய காப்புறுதி நிதியத்திலிருந்து அல்லது வ.ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திலிருந்து பெறப்பட வேண்டிய போதிலும் சபைக்குச் சொந்தமான வாகனங்கள் தனியார் காப்புறுதிக் கம்பனியிடம் காப்புறுதி செய்யப்பட்டிருந்தன.

(ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 9.3.1 (ஆ)பந்தியின் பிரகாரம் ரூபா 100,000 இற்கு மேற்பட்ட பழுதுபார்த்தலுக்காக அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமல் எச்.ஜே-7628 ஆம் இலக்க வாகனத்திற்கு உதிரிப்பாகங்கள் இட்டு பழுதுபார்ப்பதற்காக 03 சந்தர்ப்பங்களின் போது ரூபா 447,013 தொகை செலவிடப்பட்டிருந்தன. மத்திய மாகாண பிரதம செயலாளரின் 2002 யூலை 25 ஆந் திகதிய சீபீசீ/சீஎஸ்/9/4/1/6/55 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் பழுதுபார்த்தல்கள் திருப்திகரமானதாக மேற்கொள்ளப்பட்டமை பற்றி உரிய

எந்திரப் பொறியியலாளரின் அறிக்கை பெறப்படாதிருந்ததுடன் உதிரிப்பாகங்கள் வாகனத்திற்கு இடப்பட்டமைக்கான உறுதிப்படுத்தல்களும் பெறப்பட்டிருக்கவில்லை. மேற்கூறப்பட்ட வாகனத்திற்குரிய ஓட்ட அட்டவனை 2009 யூலை மாதத்தின் பின்னர் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) சீருடைத் துணி கொள்வனவு செய்தல்**

சபை உத்தியோகத்தர் மற்றும் ஊழியர்களுக்காக 04 சந்தர்ப்பங்களில் 04 நிறுவனத்திலிருந்து ரூபா 378,217 தொகையில் சீருடைத் துணிக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இக் கொள்வனவுக்குரிய கூறுவிலை கோரல் கடிதங்களின் அலுவலகப் பிரதிகள், கூறு விலைகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி மற்றும் நேரம் என்பன 2010 யூன் 30 ஆந் திகதி மு.ப 10.00 என காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் கூறுவிலை கோரப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதங்களின் கூறுவிலைகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி மற்றும் நேரம் என்பன 2010 யூலை 09 ஆந் திகதி மு.ப 10.00 மணி எனக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) கூறுவிலைகள் சேருகின்ற போது வகை, அளவு போன்ற மாதிரிகளின் விபரங்கள் காண்பிக்கப்படாமையினால் கூறுவிலைகள் சமர்ப்பித்த நிறுவனங்கள் பல்வேறு வகையான மாதிரிகளைச் சமர்ப்பித்திருந்தனர்.

(iii) கொள்வனவுக் குழு எவ்வித அடிப்படையுமின்றி மாதிரிகளைத் தெரிவு செய்து அங்கீகரிக்கப்பட்ட ஆகக் குறைந்த கூறுவிலை ஏற்றுக்கொள்ளப்படாமல் 02 சந்தர்ப்பங்களில் அதிக கூறுவிலையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(iv) 04 பேர்களை உள்ளடக்கிய மாதிரிகள் பரீட்ச்சிக்கும் குழுவால் இரண்டு பேர்களின் பங்குபற்றலுடன் கொள்வனவுகளுக்கான சிபார்சு வழங்கப்பட்டிருந்தன.

(v) இடம்மாறிச் சென்று இதுவரையிலும் சேவைக்கு அறிக்கையிடாத வருமானப் பரிசோதகருக்காக ரூபா 4,536 பெறுமதியான 09 மீற்றர் காக்கித் துணி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(vi) 2010 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய 08:01:25 ஆம் இலக்க சபைத் தீர்மானத்தின் பிரகாரம் சீருடைத் துணி கொள்வனவு செய்வதற்காக ரூபா 278,216 தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 378,217 தொகை செலவிடப்பட்டமையினால் சபை அங்கீகாரமின்றி ரூபா 100,000 மேலதிகமாகச் செலவிடப்பட்டிருந்தன.

(vii) இக் கொள்வனவுகளில் காணப்பட்ட ரூபா 142,500 பெறுமதியான 375 மீற்றர் செங்கபில நிறத் துணி களஞ்சியத்தில் காணப்பட்ட போதும் 2011 ஆம் ஆண்டிற்காகவும் ரூபா 157,500 பெறுமதியான 375 மீற்றர் துணி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

## 2.7 இனங்காணப்பட்ட நட்டம் மற்றும் இழப்புக்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது சபை பேணியிருந்த தகவல்கள் மற்றும் பொருள் மெய்மையாய்வு அறிக்கை என்பவற்றின் பிரகாரம் பெறுமதி கணிப்பிடப்படாத 99 களஞ்சிய இருப்பு விடயங்களின் பற்றாக்குறை அவதானிக்கப்பட்டன.

## 2.8 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) ரூபா 546,237 தொகையான இருப்புக் குறைவு தொடர்பாக முறையான செயன்முறைகள் எடுக்கப்படாமல் சில வருடங்களாக முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஆ) 2005 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து முன்கொண்டு வரப்படுகின்ற தொகையான அறவீடுகளில் மோசடி செய்யப்பட்ட பணமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 26,549 மீதி தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதம செயலாளரின் 2008 ஏப்ரல் 19 ஆந் திகதிய சீபீசீ/சீஎம்எஸ்/1/11/11/1 ஆம் இலக்க கடிதம் மற்றும் மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 1999 நவம்பர் 04 ஆந் திகதிய சீபீசீ/சீஎல்ஜீ/03/01 ஆம் இலக்க சுற்றுநிரூபத்தின்

பிரகாரம் ஆதனவரி பதிவேடு எழுதுதல் மற்றும் பரிசோதனை செய்தல் என்பவற்றுக்காக கண்டி மாநகர சபையின் 2008 ஆம் ஆண்டிற்கு மாத்திரம் மத்திய மாகாண பிரதம செயலாளரின் கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு 2011 ஆம் ஆண்டிற்கான ஆதனவரி பதிவேடு எதிர்நோக்கும் வருடங்களுக்காக எழுதுதல் மற்றும் பரிசோதித்தல் என்பவற்றுக்காக கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தன. இந்த ஆதனவரிப் பதிவேடு 2003 ஆம் ஆண்டின் போது எழுதப்பட்டிருந்ததுடன் 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளிற்காக இந்த ஏடுகளை எழுதுதல், மற்றும் பரீட்சித்தலுக்காக ரூபா 153,292 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

(ஈ) 2011 யூலை 29 ஆந் திகதி சபையில் நாளாந்த கடமைகளில் ஈடுபடுத்தப்படுகின்ற ஊழியர்களின் சேவையில் ஈடுபடல் தொடர்பான பௌதீக பரிசோதனையின் போது வீ. ரீ. நாணயக்கார பூங்காவில் சேவையில் ஈடுபடுத்த வேண்டிய ஊழியர் அரசாங்க விடுதியில் சேவையாற்றுகின்றமை அவதானிக்கப்பட்டது. 2010 யூன் 05 ஆந் திகதி தொடக்கம் பரீட்சிப்புத் திகதியான 2011 யூலை 29 ஆந் திகதி வரையும் அந்த ஊழியர் மேற்கூறப்பட்ட பூங்காவில் சேவை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்ட போதிலும் அக் காலத்தில் ஒரு நாளேனும் அதில் சேவையாற்றாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டதுடன் 2010 யூன் தொடக்கம் திசெம்பர் வரை ரூபா 135,180 தொகையும் 2011 சனவரி தொடக்கம் யூலை வரை ரூபா 151,315 தொகையும் ஆக எவ்வித சேவையும் பெறப்படாது சபை நிதியத்திலிருந்து சம்பளமாக ரூபா 286,495 தொகை செலுத்தப்பட்டிருந்தன.

(உ) இரவு பாதுகாப்பு சேவையில் ஈடுபடுத்தியமை தொடர்பாக 2011 யூலை 29 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போது சோமசுந்தரம் சனசமூக நிலையத்தில் பாதுகாப்பு சேவைக்காக ஈடுபடுத்தப்பட்ட காவலாளி அந்த நிலையத்தில் சேவையில் இல்லாதிருந்ததுடன் அவர் தனியார் விடொன்றில் சேவையாற்றுகின்றமை வெளிப்படுத்தப்பட்டது.

(ஊ) 1995 திசெம்பர் 27 ஆந் திகதிய மத்திய மாகாண பிரதம செயலாளரின் 95/9 ஆம் இலக்க கணக்குச் சுற்று நிருபத்தின் 6 பந்தியின் பிரகாரம் ஓய்வு பெற்றுச் செல்கின்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதியைத் தீர்த்து வைப்பதற்கு அவசியமான சகல நடவடிக்கைகளும் உத்தியோகத்தர் இறுதியாகச் சேவையாற்றிய கணக்குப் பிரிவினால் செய்யப்பட வேண்டியமை காண்பிக்கப்பட்டிருந்த போதும் ஓய்வு பெற்றுச் சென்ற 130 உத்தியோகத்தர்களிடமிருந்தும் அறவிட வேண்டிய ரூபா 829,381 தொகையான

நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 1994 தொடக்கம் 2010 காலப்பகுதிக்குரிய ஆதனக் கடன் வட்டியான ரூபா 2,586,042 தொகை உள்ளுரரிட்சி ஆணையாளர்களிடமிருந்து மீளளிப்புச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் 03 செலவின விடயங்களின் கீழ் அபிவிருத்தி திட்டங்களுக்காக ரூபா 1,330,000 ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதனை நிறைவேற்றாமல் சபையின் கூட்ட மண்டபத்திற்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,041,500 தொகை மாற்றீடு செய்யப்பட்டிருந்தது.

## 2.9 வீட்டு வாடகை அறவிடல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தொழிலாளர் வீடுகளில் வீட்டு வாடகை மதிப்பீடு செய்தல் மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட கூடிய போதிலும் நகர செயலாளரினால் நியமிக்கப்பட்ட நகர பொறியியலாளர், பிரதான வருமானப் பரிசோதகர் மற்றும் பொது சுகாதார பரிசோதகர் போன்றவர்களின் ஒன்றினைந்த குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமல் வீடு வாடகைக்கு விடப்பட்ட சந்தர்ப்பங்களைக் காணக்கூடியதாக இருந்தன.

(ஆ) அரச விடுதிகளிலிருந்து அகற்றப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் நிலுவை வீட்டு வாடகை மற்றும் மின்சாரப் பட்டியல்கள் ரூபா 45,487 தொகை மற்றும் ஹிக்கொல்லயில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான தொழிலாளர் விடுதிகளில் வசித்து பின்னர் ஓய்வு பெற்றுச் சென்ற தொழிலாளர்களிடமிருந்து ரூபா 48,080 தொகை அறவிட வேண்டிய போதிலும் அத்தொகையை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக்கோவை XIV ஆம் அத்தியாயத்தின் 6:1 ஆம் பந்தியில் ஒதுக்கீடு செய்யப்படாத அரசாங்க விடுதிகளில் வசிக்கக் கூடிய ஆக்கக்கூடிய காலம் 05 வருடங்களாக இருந்த போதிலும் அந்த எல்லையினை விஞ்சி விடுதிகளில் வசித்து வரும் 06 சந்தர்ப்பங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு

(இ) நிதிக் கட்டுப்பாடு

(ஈ) வருமான நிருவாகம்

(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஊ) இருப்புக் கட்டுப்பாடு

(எ) கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் கட்டுப்பாடு